**O.S.01/2018 PW1 Tr.PARASURAMAN CROSS EXAMINATION DATED.12.11.2019**

எனக்கு எழுத படிக்கத் தெரியாது. கைநாட்டு வைப்பேன். என்னுடைய பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் படித்துக் காண்பித்தார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். என்னுடைய அண்ணன் பெயர் சொக்கலிங்கம், என் உடன் பிறந்தவர்கள் 6 பேர். சொக்கலிங்கம், ராஜகோபால், கணேசன், ஆறுமுகம், சண்முகம், பரசுராமன் (நான்). தாவா சொத்தை என் அண்ணன் வாங்கினார். லட்சுமியம்மாள், கோவிந்தம்மாள் ஆகியோர் கிரையம் கொடுத்தனர். தாவா சொத்து லட்சுமியம்மாள் மற்றும் கோவிந்தம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று ஆதரமாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. தாவா சொத்தை லட்சுமியம்மாள் மற்றும் கோவிந்தம்மாள் அனுபவித்தில் இருந்தார்கள் என்று முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளது என்றால் சரிதான். அவர்கள் அனுபவத்தில் இருந்தார்கள் என்று ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கோவிந்தம்மாளுக்கு முன்னால் அவருடைய கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு பின்னால் லட்சுமியம்மாள் இறந்துவிட்டார். அவர்களுக்கு வாரிசு எதுவும் இல்லை. கோவிந்தம்மாளும், அவருடைய கணவரும் இறந்தவிட்டபடியால் கோவிந்தம்மாளின் சகோதரி லட்சுமியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து என் அண்ணன் பெயரில் தான் வாங்கினார். ஜக்பந்திகள் குறித்து குறிப்பாக சொல்ல இயலாது. என்னுடைய அண்ணன் தர்மலிங்கம் என்பரிடம் சொத்து வாங்கினார் என்றால் ஞாபகம் இல்லை. கூட்டுக் குடும்பமாக இருந்தோம் என்பதை காண்பிக்க குடும்ப அட்டையை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கூட்டுப் பட்டா ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 1982ல் நாங்கள் எங்களுக்குள் வாய் மூலமாக பாகப்பிரிவினை செய்துக் கொண்டோம் என்றால் சரி. தாவா சொத்து குறித்து பிரச்சனை எழுந்தது, என்னுடைய சகோதரர்களிடமிருந்த எழுத்து மூலமாக ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. பஞ்சாயத்து எதுவும் பேசி எங்களுக்குள் எதுவும் எழுதி வாங்கவில்லை. 1998ல் வீடு கட்டும் போது பஞ்சாயத்து ஒப்புதல் வாங்கினேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் விஸ்தீரனம்

குறித்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவாவில் குறிப்பிடப்பட்ட சர்வே எண்.1176ஏ/1க்கும், சர்வே எண்.1335/8க்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் தவறு. 1335/8 சர்வே எண் பொது மக்கள் செல்லும் வழிபாதை, அதை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளோம் என்றால் தவறு. சர்வே எண்.1176, சர்வே எண்.1335 ஆக மாறியதை குறித்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 20 வருடமாக நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம், திடீரென்று பிரதிவாதிகள் அது பொது சந்து என்று கூறுவது தவறு. நீதிமன்றத்திற்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை கடிதம் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. நானும், என் அண்ணன், தம்பிகளும் வாய்மொழியாக பிரித்துக் கொண்ட சொத்துக்கும் சர்வே எண்.1335க்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாசில்தார் அனுப்பிய கடிதத்தின் தேதி தெரியாது. தாவா சொத்து சர்வே எண்.1335க்கும் எங்களுடைய இதர சொத்துக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.